வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி 25.03.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

காசநோய்க்கு எதிரான இந்தியாவின் போராட்டத்தில், குறிப்பிடத் தகுந்த முன்னேற்றங்கள் எட்டப்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

வரவிருக்கும் நிதியாண்டிற்கான மத்திய அரசின் நிதி உத்தேசங்களை அமல்படுத்த வகை செய்யும் நிதி மசோதா, மக்களவையில் இன்று நிறைவேற்றப்பட்டது.

ஒரே நாடு- ஒரே தேர்தல் உத்தேசம் குறித்து ஆராய்வதற்கான கூட்டு நாடாளுமன்றக் குழுவின் பதவிக் காலம், நீட்டிக்கப் பட்டுள்ளது.

புதுச்சேரியில், SC-ST மாணவர்களுக்கு, முழு கல்வி உதவித் தொகை, மற்றும் மத்திய அரசின் உதவித் தொகை வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

---

காசநோய்-மோடி (11)

காசநோய்க்கு எதிரான இந்தியாவின் போராட்டத்தில், குறிப்பிடத் தகுந்த முன்னேற்றங்கள் எட்டப்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். நாடு முழுவதும், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட 100 நாள் தீவிர காசநோய் ஒழிப்பு இயக்கம் குறித்து, மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா எழுதி உள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டு, காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்குவதற்கான

முக்கிய அடிதளமாக இந்த இயக்கம் அமைந்ததாக கூறியுள்ளார். இந்த 100 நாள் இயக்கம், புதுமையாக்கத்தின் சக்தியை வெளிப்படுத்தி இருப்பதுடன், காசநோயை ஒழிப்பதில், மக்கள் பங்கேற்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி இருப்பதாக, திரு. ஜே.பி நட்டா தமது கட்டுரையில் கூறியிருந்தார்.

---------------------------

*நிதி மசோதா* (20)

வரவிருக்கும் நிதியாண்டிற்கான மத்திய அரசின் நிதி உத்தேசங்களை அமல்படுத்த வகை செய்யும் நிதி மசோதா, மக்களவையில் இன்று நிறைவேற்றப்பட்டது. இம்மசோதா மீது அவையில் இடம்பெற்ற விவாதங்களுக்கு, நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் பதில் அளிக்கையில், வரி செலுத்துவோரை கவுரவித்து, வர்த்தகம் புரிவதை எளிமையாக்க ஏதுவாக, முன் எப்போதும் இல்லாத வரிச் சலுகைகள் இம்முறை வழங்கப் பட்டுள்ளதாக தெரிவித்தார். புதிய வரி விதிமுறைகளின் படி, 12 லட்சம் ரூபாய் வரையிலான ஆண்டு வருமானத்திற்கு, வருமான வரி இல்லை என்பதை நிதயமைச்சர் சுட்டிக் காட்டினார். உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து, ஏற்றுமதி துறையின் போட்டித் திறனை மேம்படுத்தும் வகையில், கச்சா பொருட்கள் மீதான வரிகள் குறைக்கப் பட்டுள்ளதாகவும், மின்சார வாகனங்களுக்கான பேட்டரி உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், 35 பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளதாக தெரிவித்த அவர், வேறு 28 மூலதனப் பொருட்களும் வரிவிலக்கு பட்டியலில், சேர்க்கப் பட்டுள்ளதாக கூறினார். முன்னதாக, காங்கிரஸ் உறுப்பினர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு, மேற்குவங்கம் மற்றும் இதர எதிர்கட்சி மாநிலங்களுக்கு நிதி விடுவிக்கப் படவில்லை என, இம்மாநிலங்களைச் சேர்ந்த எதிர்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டியதால், அவையில் அமளி மற்றும் ஒத்தி வைப்பு ஏற்பட்டது.

---------------------------

ஒரே நாடு-ஒரே தேர்தல் (5)

ஒரே நாடு- ஒரே தேர்தல் உத்தேசம் குறித்து ஆராய்வதற்கான கூட்டு நாடாளுமன்றக் குழுவின் பதவிக் காலம், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரின், கடைசி வார, முதல் நாள் வரை நீட்டிக்கப் பட்டுள்ளது. குழுவின் தலைவர் திரு. பீ.பி சௌத்ரி, இது தொடர்பாக இன்று, மக்களவையில் கொண்டு வந்த தீர்மானத்தை, அவை ஏற்றுக்கொண்டது.

---------------------------

பழங்குடியினர் (9)

மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன், இன்று புதுடெல்லியில், மாநில சிறபான்மையினர் ஆணையங்களுக்கு இடையிலான மாநாட்டை தொடக்கி வைத்தார். தேசிய பழங்குடியினர் ஆணையத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இம்மாநாட்டில், வல்லுனர்கள், மற்றும், கொள்கை வகுப்பாளர்கள் கலந்து கொண்டு, பழங்குடி மக்களின் கல்வி, மற்றும், அதிகாரப் பங்கேற்பு குறித்து விவாதிக்கிறார்கள். பழங்குடி சமூகத்தினருக்கு சம வாய்ப்பு மற்றும் அதிகாரப் பங்கேற்பு வழங்குவதற்கான உத்திகள் குறித்தும், மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப் படுகிறது.

---------------------------

ே□ாகா போட்டி (12)

புதுடெல்லியில் வரும் 29 முதல், 31ஆம் தேதி வரை நடைபெறுவதாக இருந்த ஆசிய யோகா சேம்பியன் பட்டப் போட்டிகள், அடுத்த மாதம் 25 முதல், 27ஆம் தேதி வரை நடைபெறும் என இன்று அறிவிக்கப் பட்டுள்ளது. ரம்ஜான் நோன்பை கருத்தில் கொண்டு, பல்வேறு சர்வதேச அணிகள் விடுத்த கோரிக்கை அடிப்படையில், இவ்வாறு தேதி மாற்றம் செய்யப் பட்டுள்ளது. மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தினால், இந்திய விளையாட்டு ஆணையம் மற்றும் யோகாசனா பாரத் அமைப்புடன் இணைந்து, ஆசிய யோகா சேம்பியன் பட்ட போட்டிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. இந்திய கலாச்சார மரபுகளின் முக்கிய பகுதியான யோகாவை சர்வதேச

விளையாட்டாக மேம்படுத்தும் நோக்கத்துடன் கூடிய இப்போட்டிகளில், 16க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்க உள்ளன.

---------------------------

Waves (10)

மும்பையில், மே 1 முதல் 4ஆம் தேதி வரை நடைபெற உள்ள ஊடகம் மற்றும் கேளிக்கைத் துறைக்கான WAVES உச்சி மாநாட்டின் வெற்றிக்கு பாலிவுட் நடிகர் அட்சய்குமார் வாழ்த்து தெரிவித்துள்ளார். உலக படைப்பாளிகளுக்கான சிறந்த மேடையாகவும், துறைத் தலைவர்கள்,மற்றும் முதலீட்டாளர்களின் சந்திப்பாகவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இம்மாநாடு, சர்வதேச கேளிக்கைத் துறையின் எதிர்காலத்தை மாற்றி அமைப்பதாகவும் திகழும் என்று, வீடியோ செய்தி ஒன்றில் அவர் கூறியுள்ளார். அனிமேஷன், கேமிங், காமிக்ஸ் உள்ளிட்ட துறைகளில் உலக சக்தியாக இந்தியாவை மேம்படுத்த இம்மாநாடு உதவும் என்றும் அட்சய் குமார் தெரிவித்துள்ளார்.

---------------------------

*ரங்கசாமி கல்வி உதவி* (9)

புதுச்சேரியில், SC-ST மாணவர்களுக்கு, முழு கல்வி உதவித் தொகை வழங்கும் பணிகளையும், மத்திய அரசின் NSP கல்வித் தொகை வழங்கும் பணிகளையும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் திரு. சாய் சரவணன் குமார் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். புதுச்சேரியின் அனைத்து 4 பகுதிகளில், மொத்தம் 561 பள்ளி-கல்லூரிகளில் பயிலும் 19 ஆயிரத்து 893 மாணவ-மாணவிகள் இதனால் பயன் பெறுவார்கள் என்று அரசு செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

---------------------------

*ரங்கசாமி இடஒதுக்கீடு* 1 (18)

புதுச்சேரியில், பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினருக்கான EWS இடஒதுக்கீடு குறித்து, மத்திய அரசை கேட்டு முடிவெடுக்கப்படும் என முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார். இன்று சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது இதை தெரிவித்த அவர், EWS

குறித்து, இதுவரை கணக்கெடுப்பு இல்லை என்றும் கூறினார். மீனவ சமுதாயம் மீது, அரசுக்கு அக்கரை உள்ளதாகவும், மீனவ மக்களுக்கு கிடைக்க வேண்டிய இடஒதுக்கீட்டை, அரசு கண்டிப்பாக பெற்றுத் தரும் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார். முன்னதாக திமுக உறுப்பினர் திரு. அனிபால் கென்னடி, இடஒதுக்கீடுகள் குறித்து, அவையில் கேள்வி எழுப்பி பேசுகையில், 10 சதவிகித EWS இடஒதுக்கீட்டை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தினார். EWS இடஒதுக்கீட்டில், பல தவறுகள் நடப்பதாகவும், EWS பிரிவினரை, தேடிக் கண்டுபிடித்து இடஒதுக்கீடு வழங்கப் படுவதாகவும், எதிர்கட்சித் தலைவர் திரு. ஆர் சிவா, கூறினார்.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் கல்விக் கடன், தமிழகத்தை போல புதுச்சேரியிலும் தள்ளுபடி செய்யப்படுமா என்று திரு. சிவா கேட்டதற்கு, பாட்கோ மூலம் இவர்கள் பெற்ற கல்விக் கடனை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என, முதலமைச்சர் திரு.ரங்கசாமி பதில் அளித்தார். பூஜ்ய நேரத்தில்,

*ரங்கசாமி இடஒதுக்கீடு* 2 (4)

பெண் உறுப்பினர் திருமதி சந்திர பிரியங்கா பேசுகையில், இன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், புதுச்சேரியில், மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

---------------------------

*விவாதம் – பதில்* 1 (18)

புதுச்சேரியில், விவசாயிகளுக்கான காப்பீட்டுத் திட்டத்தையும், பாம்புக்கடி மற்றும் மின்சாரம் தாக்கி இறந்தவர்களுக்கு, 5 லட்சம் ரூபாய் வழங்குவதற்கான இன்சூரன்ஸ் திட்டத்தையும் அரசு அமல்படுத்தி இருப்பதாக, வேளாண் அமைச்சர் திரு. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். இத்திட்டத்திற்கான பிரிமியம் தொகையை அரசே செலுத்தும் என்று, அவர் இன்று சட்டப்பேரவையில், தமது துறைகளுக்கான மானியக் கோரிக்கை விவாதங்களுக்கு பதில் அளிக்கையில் கூறினார். விவசாயிகளுக்கு ஸ்மார்ட் அட்டை வழங்கப்படும் என்றும், லிங்காரெட்டிபாளையம் சர்க்கரை ஆலை

அருகே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படும் என்றும், மதகடிப்பட்டு சந்தை, உழவர் சந்தையாக செயல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். மாற்றுத் திறனாளிகளின் கடன் தொகை ரத்து செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் திரு. சாய் சரவணன் குமார் தமது துறைகள் மீதான விவாதங்களுக்கு பதில் அளிக்கையில், புதுச்சேரியில், ஆதி திராவிடர், பழங்குடியினர், மற்றும் இதர பொருளாதாரத்தில் பின்தங்கிய பயனாளிகள் 3 ஆயிரம் பேருக்கு, இலவச மனைப் பட்டாக்கள், இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி வழங்கப்படும் என்றார். ஆதி திராவிடர் நலத் துறையில், நிதியை

*விவாதம் – பதில் 2 (10)*

செலவிடும் விகிதம், நடப்பாண்டில் 100 சதவிகிதத்தை நெருங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

சிவப்பு குடும்ப அட்டை வழங்குவதில், தற்போதுள்ள விதிமுறைகள், நடப்புத் தேவைகளுக்கு ஏற்பத் திருத்தப்படும் என்று, குடிமைப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. பி.ஆர்.என் திருமுருகன், பதில் உரையில் கூறினார். நியாயவிலைக் கடை இல்லாத பகுதிகளில், புதிய கடைகள் அமைக்கப்படும் என்றும், ரேஷன் கடைகளில் Handling கட்டணத்தை உயர்த்துவதன் மூலம், ஊழியர் சம்பளம், கடை வாடகை போன்ற செலவுகளை சரிசெய்ய, நடவடிக்கை எடுக்கப் படுவதாகவும் அந்தந்த மாதத்திற்குரிய இலவச அரிசி, அந்தந்த மாதமே வழங்கப்படுவதை அரசு உறுதிப்படுத்தும் என்றும், அவர் கூறினார்.

---------------------------

*புதுச்சேரி சந்திப்பு (9)*

புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தராக அண்மையில் பொறுப்பேற்ற பேராசிரியர் பி. பிரகாஷ் பாபு, இன்று ராஜ்நிவாசில்,

துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதனை, மரியாதை நிமித்தம் சந்தித்து பேசினார்.

---------------------------

*வானிலை* (11)

தமிழகத்தில் இன்றும், நாளையும், அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றங்களுக்கான வாய்ப்பு குறைவுதான் என்றாலும், நாளை மறுநாள் முதல் 3 நாட்களுக்கு, ஒருசில இடங்களில் வெப்பநிலை, 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை, அதிகமாக பதிவாகலாம் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வெப்பநிலையும் ஈரப்பதமும் அதிகமாக உள்ள நிலையில், ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டலத்தின் கீழடுக்கில், கிழக்கு மற்றும் மேற்கு திசைக் காற்று சந்திக்கும் பகுதி நிலவுவதால், மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் அதை ஒட்டிய மாவட்டங்களில், ஓரிரு இடங்களில், லேசானது முதல், மிதமான மழை பெய்ய கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*கிரிக்கெட்* (5)

ஐபிஎல் கிரிக்கெட்டில், அகமதாபாத் நரேந்திர மோடி விளையாட்டு அரங்கில், இன்று மாலை 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில், குஜராத்- பஞ்சாப் அணிகள் மோத உள்ளன. விசாகப் பட்டினத்தில் நேற்று இரவு நடைபெற்ற போட்டியில், டெல்லி அணி, 1 விக்கெட் வித்தியாசத்தில், லக்னோ அணியை தோற்கடித்தது.

---------------------------

*கால்பந்து* (7)

2027ஆம் ஆண்டு, AFC ஆசியக் கோப்பை கால்பந்து போட்டித் தொடரில் பங்கேற்கும் அணிகளை தேர்ந்தெடுக்க, ஷில்லாங்கில் இன்று மாலை நடைபெறும் முக்கியமான 3ஆம் சுற்றுப் போட்டியில், இந்திய அணி, பங்களாதேஷ் அணிக்கு எதிராக மோத உள்ளது. மாலத்தீவு

அணியுடன் கடந்த புதன் கிழமை நடைபெற்ற நட்புணர்வுப் போட்டியில் வெற்றி பெற்ற முனைப்புடன் இந்திய கால்பந்து அணி, இன்றைய போட்டியில் களம் இறங்குகிறது.

---------------------------

*மாவோயிஸ்ட் (6)*

சத்தீஸ்கர் மாநிலம் தந்தேவாடா மாவட்ட வனப் பகுதியில் இன்று, மாவோயிஸ்டுகளுக்கும், பாதுகாப்புப் படைகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், 3 மாவோயிஸ்ட்டுகள் சுட்டுக் கொல்லப் பட்டனர். சம்பவ இடத்தில் இருந்து, மாவோயிஸ்ட்டுகளின் உடல்களையும், பல்வேறு ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகளையும், கூட்டுப் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றி உள்ளனர். வனப் பகுதியில் தேடுதல் வேட்டை தொடர்கிறது.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

காசநோய்க்கு எதிரான இந்தியாவின் போராட்டத்தில், குறிப்பிடத் தகுந்த முன்னேற்றங்கள் எட்டப்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

வரவிருக்கும் நிதியாண்டிற்கான மத்திய அரசின் நிதி உத்தேசங்களை அமல்படுத்த வகை செய்யும் நிதி மசோதா, மக்களவையில் இன்று நிறைவேற்றப்பட்டது.

ஒரே நாடு- ஒரே தேர்தல் உத்தேசம் குறித்து ஆராய்வதற்கான கூட்டு நாடாளுமன்றக் குழுவின் பதவிக் காலம், நீட்டிக்கப் பட்டுள்ளது.

புதுச்சேரியில், SC-ST மாணவர்களுக்கு, முழு கல்வி உதவித் தொகை, மற்றும் மத்திய அரசின் உதவித் தொகை வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.